மழையால் மீண்டும் உயரும் நீர்வரத்து

பெரியாறு அணையில் நீர் திறப்பு அதிகரிப்பு

கூடலூர், ஜூன் 25–
152 அடி உயரமுள்ள முல்லைபெரியாறு அணை தேனி மாவட்ட பாசன, குடிநீர் தேவைக்கும், வைகை அணைக்கும் முக்கிய நீராதாரமாக உள்ளது. இந்த அணையால் தேனி, மதுரை உள்ளிட்ட 5 மாவட்ட விவசாயிகள், பொதுமக்கள் பயனடைகின்றனர். கடந்த ஜூன் 1ம் தேதி அணையின் நீர்மட்டம் 130 அடியை கடந்த நிலையில், கம்பம் பள்ளத்தாக்கு முதல் போக பாசனத்திற்காக வினாடிக்கு 1,200 கன அடி நீர் திறக்கப்பட்டது. பின்னர் நீர் திறப்பு 1,800 கன அடியாக அதிகரிக்கப்பட்டது. இந்த நிலையில் நேற்று நீர்வரத்து 1252 கன அடியாகக் குறைந்தது. இதனால் நீர் திறப்பு 689 கன அடியாகவும், லோயர் கேம்ப் நீர் மின் நிலையத்தில் உற்பத்தி 62 மெகாவாட்டாகவும் குறைக்கப்பட்டது.

இந்த நிலையில் நீர்பிடிப்புப் பகுதிகளில் நேற்று 6.5 செ.மீ மழை பெய்தது. இதையடுத்து இன்று அணைக்கு நீர்வரத்து 2,261 கன அடியாக உயர்ந்தது. இதையடுத்து நீர் திறப்பு மீண்டும் 1,800 கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

லோயர்கேம்ப் மின் நிலையத்தில் மீண்டும் உற்பத்தி முழு அளவான 168 மெகாவாட்டை எட்டியுள்ளது. இன்று காலை நிலவரப்படி அணையின் நீர் மட்டம் 132.80 அடி. நீர் இருப்பு 5,352 மில்லியன் கனஅடி.

கால்நடை மருத்துவ முகாம்

நத்தம், ஜூன் 25–
கால்நடை பராமரிப்பு துறை சார்பில் திண்டுக்கல் மாவட்ட உதவி இயக்குநர் ராஜேஸ்குமார் ஆலோசனைப்படி நத்தம் அருகே சின்ன முளையூரில் சிறப்பு கால்நடை சுகாதாரம் மற்றும் விழிப்புணர்வு முகாம் நடந்தது. நத்தம் கால்நடை மருந்தக உதவி மருத்துவர் சிங்கமுத்து தலைமை வகித்தார். லிங்கவாடி உதவி மருத்துவர் பழனிச்சாமி, செந்துறை உதவி மருத்துவர் இந்து, ஆய்வாளர்கள் மாரிமுத்து பழனியம்மாள், பராமரிப்பு உதவியாளர் செந்தில்குமார் ஆகியோர் கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தனர். இதில் மாடுகளுக்கு தற்காலிக மலட்டுத்தன்மை நீக்கம், தடுப்பூசி, சினை பரிசோதனை, கருவூட்டல், குடற்புழு நீக்கம் போன்ற சிகிச்சைகள் அளிக்கப்பட்டது. கால்நடைகளை சிறப்பாக பராமரித்தவர்கள் மற்றும் சிறந்த கால்நடைகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

சின்ன முளையூரில் சிறப்பு கால்நடை மருத்துவ முகாம் நடைபெற்றது.

சதுரகிரியில்

ஆனி அமாவாசை வழிபாடு

பக்தர்கள் குவிந்தனர்

வத்திராயிருப்பு, ஜூன் 25–
விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பு அருகே மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில், கடல் மட்டத்திலிருந்து சுமார் 4,500 அடி உயரத்தில் சதுரகிரி சுந்தர மகாலிங்கம் கோயில் அமைந்துள்ளது. இந்தப் பகுதி வனத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. தற்போது தினசரி மலையேறிச் சென்று பக்தர்கள் வழிபாடு செய்து வருகின்றனர். அமாவாசை, பவுர்ணமி, பிரதோஷ நாட்கள் பக்தர்கள் கூட்டம் அதிகமாக உள்ளது. வனத்துறையினர் பக்தர்களை சோதித்து கட்டுப்பாடுகளுடன் மலையேறிச் சென்று தரிசனம் செய்ய அனுமதித்து வருகின்றனர். இந்த நிலையில் இன்று ஆனி மாத அமாவாசையை முன்னிட்டு சதுரகிரி கோயிலில் தரிசனம் செய்வதற்காக விருதுநகர், மதுரை, திண்டுக்கல், தேனி, திருச்சி, சென்னை, திருநெல்வேலி, கன்னியாகுமரி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலிருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் அதிகாலையிலேயே தாணிப்பாறை அடிவாரத்தில் குவிந்தனர். காலை 6 மணி முதல் பக்தர்கள் மலையேறிச் செல்ல அனுமதி அளிக்கப்பட்டது. காலை 6 மணி முதல் 10 மணி வரை மட்டுமே பக்தர்கள் கோயிலுக்கு செல்ல அனுமதிக்கப்பட்டனர். மாலை 4 மணிக்குள் பக்தர்கள் மலையிலிருந்து இறங்கிவிட வேண்டும் என வனத்துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனி மாத அமாவாசையை முன்னிட்டு சதுரகிரி கோவிலுக்கு மலைப்பாதையில் நடந்து சென்ற பக்தர்கள்.

இரும்பு பைப்பால்

மாற்றுத்திறனாளியை அடித்து கொன்றவருக்கு 10 ஆண்டு சிறை

தென்காசி நீதிமன்றம் தீர்ப்பு

தென்காசி, ஜூன் 25–
தென்காசி மாவட்டம், சுரண்டை அருகேயுள்ள சாம்பவர் வடகரை சாவடி தெருவை சேர்ந்தவர் பழனியப்பன் (38). பெட்ரோல் பங்கில் பணியாற்றி வந்த மாற்றுத் திறனாளியான இவருக்கும், இதே பகுதியைச் சேர்ந்த முத்துராமன் என்பவருக்கும் முன்விரோதம் இருந்து வந்துள்ளது. பெட்ரோல் பங்கில் சேருவதற்கு முன்பு பழனியப்பன் தொண்டு நிறுவனம் ஒன்றில் மேற்பார்வையாளராக வேலை பார்த்து வந்தார். அங்கு பழனியப்பன் குறித்து முத்துராமன் பலமுறை புகார் அளித்த காரணத்தால் வேலை பறிபோனதாகக் கூறப்படுகிறது.

இது தொடர்பாக இருவருக்கும் இடையே அடிக்கடி வாக்குவாதம் நடந்துள்ளது.

இந்நிலையில் கடந்த 2018ம் ஆண்டு மார்ச் 10ம் தேதி இரவு முத்துராமன் உறவினர் வீட்டினருகே பழனியப்பன் நின்றிருந்தார். அப்போது அங்கு வந்த முத்துராமன், எதற்காக இங்கு நிற்கிறாய் எனக் கேட்டு தகராறில் ஈடுபட்டுள்ளார். மேலும் இரும்பு பைபால் பழனியப்பனை சரமாரியாக அடித்தார். இந்த தாக்குதலில் படுகாயமடைந்த பழனியப்பனை உறவினர்கள் மீட்டு தென்காசி அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். ஆனால், அங்கு அவர் சிகிச்சை பலனின்றி மார்ச் 16ம்தேதி இறந்தார்.

முத்துராமன்

இது தொடர்பாக வழக்குப் பதிந்த சாம்பவர்வடகரை போலீசார், முத்துராமனை கைது செய்தனர். இவ்வழக்கை விசாரித்து வந்த தென்காசி கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்ற நீதிபதி மனோஜ்குமார், குற்றம் சாட்டப்பட்ட முத்துராமனுக்கு 10 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை மற்றும் ரூ.25 ஆயிரம் அபராதம் விதித்து நேற்று தீர்ப்பளித்தார். இவ்வழக்கில் அரசுத் தரப்பில் மாவட்ட அரசு கூடுதல் வழக்கறிஞர் வேலுச்சாமி ஆஜரானார்.

மாணவனுக்கு பாலியல் தொல்லை

வார்டன் மீது போக்சோ வழக்கு

கமுதி, ஜூன் 25–
ராமநாதபுரம் மாவட்டம், கமுதியில் உள்ள தனியார் மேல்நிலைப்பள்ளியில் 15 வயது மாணவர் ஒருவர் 10ம் வகுப்பு படித்து வருகிறார். அந்த மாணவனுக்கு, அப்பள்ளியின் விடுதி காப்பாளர் கவியரசன் (23) என்பவர் பாலியல் தொல்லை கொடுத்ததாக கூறப்படுகிறது. இது குறித்து அந்த மாணவர் தனது பெற்றோரிடம் கூறியுள்ளார். இது குறித்து மாணவனின் பெற்றோர் கமுதி மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தனர். அதன்பேரில் விடுதி காப்பாளர் கவியரசன் மீது போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

சிறுமி கர்ப்பம்

வாலிபர் கைது

திருவனந்தபுரம், ஜூன் 25–
கேரள மாநிலம் கொல்லம் மாவட்டம் குளத்துப்புழாவை சேர்ந்த ஒரு தம்பதிக்கு 14 வயதில் ஒரு மகள் உண்டு. இந்த சிறுமி அருகில் உள்ள ஒரு பள்ளியில் 8ம் வகுப்பு படித்து வருகிறார். இந்தநிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்பு சிறுமிக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டது. இதையடுத்து மகளை அவரது பெற்றோர் அருகில் உள்ள மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர். அங்கு டாக்டர்கள் பரிசோதித்ததில் சிறுமி 7 மாத கர்ப்பிணியாக இருந்தது தெரியவந்தது. இதனால் அதிர்ச்சி அடைந்த பெற்றோர் நடத்திய விசாரணையில் அருகில் கடைக்கல் பகுதியைச் சேர்ந்த 19 வயது வாலிபர் தான் அதற்கு காரணம் என்பது தெரியவந்தது.

இதுகுறித்து சிறுமியின் பெற்றோர் குளத்துப்புழா போலீசில் புகார் செய்தனர். போலீசார் வழக்கு பதிவு செய்து வாலிபரை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

கஞ்சா விற்ற 2 பேர் கைது

தேனி, ஜூன் 25–
தேனி மாவட்டம், பெரியகுளம் நகர், கம்பம் ரோட்டில், பள்ளி அருகே தென்கரை போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் கர்ணன் மற்றும் போலீசார் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அப்பகுதியில் சந்தேகத்திற்கிடமாக டூவீலரில் நின்றிருந்த பெரியகுளம் நகர் தென்கரை கிருஷ்ணன் கோயில் தெருவை சேர்ந்த கோபால் மகன் பாலாஜி(20), முத்துராஜா தெருவை சேர்ந்த சசிக்குமார் மகன் பிரேம்குமார்(18) ஆகியோரை போலீசார் சோதனை செய்தனர். அவர்களிடம் கஞ்சா இருந்தது.



விசாரணையில், கஞ்சாவை தென்கரை முத்துராஜா தெருவை சேர்ந்த ஆகாஷ்(24) என்பவர் மூலம் விற்பனை செய்தது தெரியவந்தது. இதையடுத்து பாலாஜி, பிரேம்குமாரை போலீசார் கைது செய்தனர்.

மேலும் ஆகாஷை தேடிவருகின்றனர்.

முத்தரப்பு ஒப்பந்தத்தை மீறி

கூடங்குளம் அணுமின் நிலையத்தில் பணி நியமனம் கூடாது

சபாநாயகர் அப்பாவு அணுசக்தி துறைக்கு அவசர கடிதம்

நெல்லை, ஜூன் 25–
தமிழ்நாடு சபாநாயகரும், ராதாபுரம் தொகுதி எம்எல்ஏவுமான அப்பாவு, அணுசக்தி துறை தலைவர் அஜித்குமார் மொஹந்திக்கு எழுதியுள்ள அவசர கடிதத்தில் கூறியிருப்பதாவது: நெல்லை மாவட்டம் ராதாபுரம் சட்டமன்றத் தொகுதியில் அமைந்துள்ள கூடங்குளம் அணுமின் நிலையத்தில் 'சி' பிரிவு பணியிடங்கள் நிரப்புவது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பு குறித்த சில விவரங்களை தங்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். மும்பை அணுமின் திட்ட பணியாளர் குழு இயக்குனர் அதன்டரா சென், நெல்லை கலெக்டர், அப்போதைய ராதாபுரம் தொகுதி எம்எல்ஏவாகிய நான் ஆகியோர் கலந்து கொண்டு 18-2-1999 அன்று நெல்லை மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடந்த முத்தரப்பு கூட்டத்தின் முடிவில், கூடங்குளம் அணுமின் திட்டத்திற்காக நிலங்களை வழங்கிய மக்களின் வாரிசுகள் மற்றும் உள்ளூர் இளைஞர்கள் ஆகியோருக்கு 'சி' பிரிவு பதவிகளில் வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று ஒப்பந்தம் கையெழுத்தானது.

அந்த ஒப்பந்தத்தின் படி 2006-2011 வரை திமுக ஆட்சிக்காலத்தில் நியமனங்கள் முறையாக செயல்படுத்தப்பட்டது. அந்த ஒப்பந்தத்தின்கீழ் நியமிக்கப்பட்டவர்கள் கூடங்குளம் அணுமின் நிலையத்தில் நிரந்தரமாக பணியாற்றி வருகின்றனர். ஆனால், மே 2011ல் அதிமுக ஆட்சிக்கு வந்த பிறகு, இந்த ஒப்பந்தம் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து, 2018ம் ஆண்டில் 117 'சி' பிரிவு பதவிகளையும், 62 பி பிரிவு பதவிகளையும் எழுத்துத் தேர்வு நடத்தி நிரப்புவதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இதற்கிடையில், நிலம் வழங்கியவர்களின் வாரிசுதாரர்கள் மற்றும் உள்ளூர் இளைஞர்களுக்கு தற்காலிக பணியிடங்களுக்கான வாய்ப்பில்கூட பரிசீலிக்கப்படாததால், கூடங்குளம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் பதற்ற நிலை ஏற்பட்டதால், 2-3-2024 அன்று நடந்த சமரச பேச்சுவார்த்தையின் அடிப்படையில், 3-3-2024 அன்று நடக்க இருந்த எழுத்துத் தேர்வு ரத்து செய்யப்பட்டது.

இந்நிலையில் தற்போது, குறிப்பிட்ட கால பணிக்கு 64 தொழில்நுட்ப பணியாளர்களை மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மூலமாக தேர்ந்தெடுப்பது குறித்து, தங்கள் இணையதளத்தில் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. அவ்வாறு பணியாளர்களை தேர்ந்தெடுக்கும் முறை 1999ம் ஆண்டு ஒப்பந்தத்திற்கு எதிரானது. அது மட்டுமல்லாமல், கூடங்குளம் அணுமின் நிலையத்தில் பணியாற்றும் வெளிமாநிலத்தவர்கள் மற்றும் அவர்களது உறவினர்கள் கூடங்குளத்தை சுற்றியுள்ள 16 கிமீ தூரத்திற்குள் தாங்கள் வசிப்பதாக போலி இருப்பிடச் சான்றிதழ் அளித்து, வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளவர்களை தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதாக நான் அறிகிறேன்.

எனவே, குறிப்பிட்ட கால பணிக்கான 64 தொழில்நுட்ப பணியாளர்களை தேர்ந்தெடுப்பதில், திட்டத்திற்கு நிலம் வழங்கியவர்களின் வாரிசுதாரர்களுக்கு முதலில் முன்னுரிமை அளிக்க வேண்டும். அவர்களை இரண்டு ஆண்டுகள் முடிந்தபின்பு பணிநீக்கம் செய்யாமல் தொடர்ந்து பணியாற்றவும் அனுமதிக்க வேண்டும். மேலும், 2018ம் ஆண்டு ஏற்கெனவே எழுத்துத்தேர்வு அறிவிக்கப்பட்டு, ரத்து செய்யப்பட்டுள்ள 117 'சி' பிரிவு பணியிடங்களையும் மேற்குறிப்பிட்டுள்ள முறையில்தான் நிரப்ப வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

செக் மோசடி வழக்கில் சிக்கிய

பாலிவுட் நடிகர் ராஜ்பால் ஆஸ்திரேலியா செல்ல அனுமதி

டெல்லி ஐகோர்ட் உத்தரவு

புதுடெல்லி, ஜூன் 25–
செக் மோசடி வழக்கில் சிக்கிய பாலிவுட் நடிகர் ராஜ்பால் ஆஸ்திரேலியா செல்ல டெல்லி ஐகோர்ட் நிபந்தனையுடன் அனுமதி அளித்து உத்தரவு பிறப்பித்துள்ளது.

பிரபல பாலிவுட் நகைச்சுவை நடிகர் ராஜ்பால் யாதவ் மற்றும் அவரது மனைவி, காசோலை மோசடி வழக்கில் தங்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனையை எதிர்த்து டெல்லி உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளனர்.

ராஜ்பால் யாதவ்

கடந்த ஆண்டு ஜூன் மாதம், இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம், ராஜ்பால் யாதவ் தம்பதியினர் தொடர்ச்சியாகக் குற்றம் செய்பவர்கள் இல்லை என்பதைக் கருத்தில் கொண்டு, கீழ் நீதிமன்றம் விதித்த தண்டனையை நிறுத்தி வைத்தது. மேலும், இரு தரப்பினரும் பேசி சுமுகமாகத் தீர்வு காணவும் நீதிமன்றம் அறிவுறுத்தியது. தொடர்ந்து இந்த வழக்கு தற்போது டெல்லி உயர் நீதிமன்றத்தின் சமரச மையத்தில் விசாரணையில் இருந்து வருகிறது. இந்த நிலையில், ராஜ்பால் யாதவ் தனது புதிய படமான 'மேரா காலே ரங்தாயார்' திரைப்படத்தின் விளம்பரப் பணிகளுக்காக, ஜூன் 27 முதல் ஜூலை 5 வரை ஆஸ்திரேலியாவில் உள்ள மெல்போர்ன் நகருக்குச் செல்ல அனுமதி கோரி மனு தாக்கல் செய்தார்.

இந்த மனுவை விசாரித்த விடுமுறைக் கால நீதிபதி ரஜ்னீஷ் குமார் குப்தா, சில நிபந்தனைகளுடன் அவரது பயணத்திற்கு அனுமதி வழங்கினார். அதன்படி, ராஜ்பால் யாதவ் ரூ.1 லட்சத்திற்கான நிரந்தர வைப்பு நிதி ரசீதை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும். மேலும், விசாரணை நீதிமன்றத்தின் கட்டுப்பாட்டில் உள்ள அவரது பாஸ்போர்ட்டை தற்காலிகமாக விடுவிக்கவும், அவர் இந்தியா திரும்பியதும் உடனடியாக பாஸ்போர்ட்டை மீண்டும் ஒப்படைக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த வழக்கின் அடுத்தகட்ட விசாரணை ஜூலை 8ம் தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

திருப்பூரில் இன்று அதிகாலை பயங்கரம்

இந்து முன்னணி பிரமுகர் சரமாரி வெட்டி கொலை

3 பேர் கும்பல் வெறிச்செயல்

திருப்பூர், ஜூன் 25–
திருப்பூரில் இன்று அதிகாலை 3 பேர் கும்பலால் இந்து முன்னணி பிரமுகர் அரிவாளால் வெட்டி கொலை செய்யப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

திருப்பூர், குமரானந்தபுரம் காமராஜர் வீதியை சேர்ந்தவர் பாலமுருகன் (30). இவருக்கு திருமணமாகி 6 மாதமே ஆகிறது. பைனான்ஸ் தொழில் செய்து வந்தார்.

இவர் இந்து முன்னணி திருப்பூர் ஒன்றிய செயற்குழு உறுப்பினராக இருந்து வந்தார். பாமுருகன் வீட்டில் தன் மனைவி, பெற்றோருடன் வசித்து வந்தார்.

இந்நிலையில் பாலமுருகனுக்கு நள்ளிரவு 12 மணிக்கு செல்போன் அழைப்பு வந்தது. இதை தொடர்ந்து பாலமுருகன் வீட்டிலிருந்து வெளியே சென்றார். நீண்ட நேரமாகியும் பாலமுருகன் வீடு திரும்பவில்லை. இந்நிலையில் இன்று அதிகாலை 5 மணியளவில் பாலமுருகனை அவரது உறவினர்கள் தேடி வீட்டை விட்டு வெளியில் வந்தனர்.



கொலையான பாலமுருகன்

அப்போது வீட்டின் அருகில் மர்மநபர்களால் பாலமுருகன் வெட்டி கொலை செய்யப்பட்டு கிடந்தார்.

தகவலறிந்த மாநகர துணை கமிஷனர் பிரவீன் கவுதம் மற்றும் போலீசார் சம்பவ இடத்தில் விசாரணை நடத்தினர். உடலை பிரேத பரிசோதனைக்காக திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். போலீசார் நடத்திய விசாரணையில் இன்று அதிகாலை 4 மணிக்கு மூன்று பேர் கொண்ட கும்பல் பாலமுருகனை அவர் வசிக்கும் அதே வீதியில் அவரை சரமாரியாக அரிவாளால் வெட்டி கொலை செய்துவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றது தெரியவந்தது. கொலையாளிகளை பிடிக்க அமைக்கப்பட்ட 3 தனிப்படை போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஞாயிறுதோறும்
வார ராசி பலன்
படியுங்கள்

அமேசான் இந்தியா 2025 பிரைம் டே

பிரைம் டே 2025 இந்தியாவில் முதன்முறையாக மூன்று நாள் கொண்டாட்டமாக இருக்கும் என்று அமேசான் இந்தியா இன்று அறிவித்துள்ளது. ஜூலை 12 ஆம் தேதி அதிகாலை 12:00 மணி முதல் ஜூலை 14 ஆம் தேதி இரவு 11:59 மணி வரை நடைபெறும் இந்த கொண்டாட்டத்தில் 72 மணிநேர சிறந்த சலுகைகள், சேமிப்புகள், புதிய வெளியீடுகள் மற்றும் பிரத்யேக பொழுதுபோக்கு ஆகியவை பிரைம் உறுப்பினர்களுக்காக பிரத்யேகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இந்தியாவில் முதன்முறையாக, பிரைம் உறுப்பினர்கள் முன்னணி பிராண்டுகள் மற்றும் சிறு வணிகங்களில் ஷாப்பிங் செய்ய 24 மணிநேர கூடுதல் நேரத்தை அனுபவிப்பார்கள், முன்னணி கூட்டாளர் வங்கிகளிடமிருந்து அற்புதமான சலுகைகளைப் பெறுவார்கள். ஐசிஐசிஐ வங்கி கிரெடிட் & டெபிட் கார்டுகள், எஸ்பிஐ கிரெடிட் கார்டுகள் மற்றும் ஐசிஐசிஐ வங்கி கிரெடிட் கார்டுகள் மற்றும் எஸ்பிஐ கிரெடிட் கார்டுகளில் இஎம்ஐ பரிவர்த்தனைகளைப் பயன்படுத்தி பணம் செலுத்துவதில் 10% சேமிப்புடன் வாடிக்கையாளர்கள் பெரிய அளவில் சேமிக்க முடியும். இந்தியா மற்றும் வளர்ந்து வரும் சந்தைகளின் பிரைம், டெலிவரி மற்றும் ரிட்டர்ன்ஸ் இயக்குனர் அக்ஷய் சாஹி "புதிய வெளியீடுகள் மற்றும் பிளாக்பஸ்டர் பொழுதுபோக்கு முதல், சிறந்த சலுகைகள் விரைவாக டெலிவரி செய்யப்படுவது வரை. பிரைம் டே எப்போதும் எங்கள் உறுப்பினர்களைக் கொண்டாடுவதாகவே இருந்து வருகிறது. இந்த ஆண்டு, முதல் முறையாக, பிரைம் டேவை மூன்று முழு நாட்களுக்கு நீட்டிக்கிறோம்" என்று கூறினார். ★

வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், உத்தமபாளையம்
ந.க.எண்.718/2025/அ1

சீலாதேவி, க/பெ. பரிதிதிலகர்,
க.எண். 49, வார்டு 13,
சுருளிரோடு, காமயகவுண்டன்பட்டி,
உத்தமபாளையம் வட்டம்.
– மனுதாரர்

–எதிரிடை–

வருவாய் கோட்டாட்சியர்,
உத்தமபாளையம்.
–எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மனுதார் சீலாதேவி 09.11.1987ம் தேதி கோம்பை கிராமத்தில் பிறந்தார். அறியாமையின் காரணமாக அவரது பிறப்பைபதிவுசெய்யவில்லை. அவரது பிறப்பை அரசுப் பதிவேட்டில் பதிவு செய்ய எதிர்மனுதாரர்க்கு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மனுவில் யாருக்கேனும் ஆட்சேபணை இருந்தால் 02.07.2025 அன்று முற்பகல் 10.30 மணிக்கு நேரில் ஒரு சாட்சியுடனும் மேற்படி பிறந்த நபருக்கு அடையாள ஆவணங்களுடன் ஆஜர் ஆகுமாறு மனுதாரர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். தவறும்பட்சத்தில் மனுவானது ஒருதலைப்பட்சமாக எடுத்துக்கொள்ளப்படும்.

மனுதாரர்,
சீலாதேவி

Godrej Finance Limited
Godrej | FINANCE A Godrej Capital Company

பொது அறிவிப்பு

'கோத்ரேஜ் ஃபைனான்ஸ் லிமிடெட்' நிறுவனத்தால், இந்திய ரிசர்வ் வங்கியின் (வங்கி சாரா நிதி நிறுவனம் – அளவு அடிப்படையிலான ஒழுங்குமுறை) வழிமுறைகள், 2023 இன் பத்தி 43ன் படி வெளியிடப்பட்டது.

கோத்ரேஜ் ஃபைனான்ஸ் லிமிடெட் ("நிறுவனம்" அல்லது "GFL") என்பது நிறுவனங்கள் சட்டம், 1956 இன் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு பொது வரையறுக்கப்பட்ட நிறுவனமாகும் (பெருநிறுவன அடையாள எண்: U67120MH1992PLC065457). இது இந்திய ரிசர்வ் வங்கியுடன் (COR. எண்: 13.00368) வைப்புத்தொகை பெறாத வங்கி சாரா நிதி நிறுவனமாக ("NBFC") பதிவு செய்யப்பட்டுள்ளது. GFL அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் கோத்ரேஜ் ஒன், பிரோஜ்ஷாநகர், ஈஸ்டர்ன் எக்ஸ்பிரஸ் ஹைவே, விக்ரோலி (கிழக்கு), மும்பை - 400079, மகாராஷ்டிரா என்ற முகவரியில் அமைந்துள்ளது.

இது செயல்பாட்டு காரணங்களுக்காக, மை பிரான்ச், 1வது மாடி, விகாஷினி, 760, வெஸ்ட் 80 ஃபீட் ரோடு, அண்ணா நகர், மதுரை, தமிழ்நாடு – 625020 என்ற முகவரியில் அமைந்துள்ள நிறுவனத்தின் கிளை அலுவலகம், இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட தேதியிலிருந்து 3 மாதங்களுக்குள் மூடப்படும் என்றும், மேலும் கிளை செயல்பாடுகள் மற்றும் வாடிக்கையாளர் சேவைகள் SEV டவர்ஸ் 1-A, வெஸ்ட் பெருமாள் மேஸ்திரி தெரு, மதுரை: 625001 என்ற முகவரியில் அமைந்துள்ள கிளை அலுவலகத்திலிருந்து மேற்கொள்ளப்படும் என்றும் இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

அனைத்து வாடிக்கையாளர் கேள்விகளுக்கும் customercare@godrejcapital.com என்றமின்னஞ்சல் முகவரியில் பதிலளிக்கப்படும்.

இது தொடர்பாக ஏதேனும் விளக்கங்கள் அல்லது விசாரணைகள் இருந்தால், இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட தேதியிலிருந்து 30 (முப்பது) நாட்களுக்குள் திரு. யோகேஷ் ஜெயின், தலைமை இணக்க அதிகாரி அவர்களுக்கு முகவரியிட்டு, நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில் அல்லது gfl.compliance@godrejfinance.com என்ற மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

கையொப்பம்/-
கோத்ரேஜ் ஃபைனான்ஸ் லிமிடெட் சார்பாக

இடம்: மும்பை
தேதி: 25/06/2025

ட்ரூஹோம் நிதி லிமிடெட்
(முன்பு ஸ்ரீராம் வீட்டு வசதி நிதி லிமிடெட் என அறியப்பட்டது)

Truhome FINANCE

பதிவு அலுவலகம்: ஸ்ரீநிவாசா டவர், முதல் தளம், கதவு எண்.5, பழைய எண்.11, 2வது லேன், செனடாப் சாலை, ஆழ்வார்பேட்டை தேனாம்பேட்டை, சென்னை–600 018. **தலைமை அலுவலகம்:** நிலை–3, வோக்ஹார்ட் டவர்ஸ், கிழக்கு விங் C–2,G பிளாக், பாந்த்ரா குர்லா வளாகம், பாந்த்ரா (கிழக்கு), மும்பை–400 051; **இணையதளம்:** http://www.truhomefinance.in

சுவாதீன அறிவிப்பு

இவ்வாறிருக்க, கீழே கையொப்பமிட்டவர் ட்ரூஹோம் நிதி லிமிடெடின் (முன்பு ஸ்ரீராம் வீட்டு வசதி நிதி லிமிடெட்) அதிகாரப்பூர்வ அதிகாரியாக இருக்கிறபடியால் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (மேற்கூறிய சட்டம்) விதிமுறைகளின் 2002 இல் 54 கீழ் மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (மேற்கூறிய விதிகள்) இன் விதி 3 உடன் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(12) கீழ் தமக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி கீழே அட்டவணையில் விவரங்கள் குறிப்பிட்டுள்ள கடன்தாரர்களுக்கு கோரிக்கை அறிவிப்புகள் வழங்கி மேற்கூறிய கோரிக்கை அறிவிப்புகளில் குறிப்பிட்டுள்ளத் தொகையைத் 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறுக் கோரியிருந்தார்.

கடன்தாரர்கள் தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியுள்ளனர், இதன்மூலம் கடன்தாரர்கள் மற்றும் பொதுவாக பொதுமக்களுக்கு வழங்கப்படும் அறிவிப்பாவது கீழே கையொப்பமிட்ட அதிகாரப்பூர்வ அதிகாரி, அவருக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி மேற்கூறிய விதிகளின் விதி 8 உடன் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(4) கீழ், பாதுகாப்பு நலன் அமலாக்க விதிகள்,2002 இங்கே கீழே விவரிக்கப்பட்ட சொத்தினை, 23ஆம் தேதி ஜூன் 2025 சுவாதீனம் செய்துள்ளார்.

கடன்தாரருக்கு குறிப்பிட்டு மேலும் பொதுமக்களுக்கு பொதுவாக இதன்மூலம் எச்சரிக்கப்படுவதாவது சொத்துடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டாம் மேலும் சொத்துடனான அனைத்து நடவடிக்கைகளும் இங்கே கீழே குறிப்பிட்டத் தொகைக்காக அதற்குரிய வட்டியுடன் ட்ரூஹோம் நிதி லிமிடெடின் (முன்பு ஸ்ரீராம் வீட்டு வசதி நிதி லிமிடெட்) வசூலுக்கு உட்படும்.

(கடனீட்டுச் சொத்துகளை மீட்பதற்கு, கால அவகாசம் கிடைக்கப்பெறுதல் குறித்த, சட்டத்தின் பிரிவு 13 இன் உட்–பிரிவு (8) விதிமுறைகள் கடன்தாரர் கவனத்திற்கு கொண்டுவரப்படுகின்றன)

கடன்தாரர்கள் பெயர் மற்றும் முகவரி

திரு.ரிவன்ராஜ் த/பெ.திரு.தமிழன்
எண்.13/203 பிரதான சாலை, சிங்கராஜபுரம், மயிலாடும்பாறை வருஷநாடு, தேனி - 625579
திருமதி.ஜெயலட்சுமி க/பெ.திரு.தமிழன்
எண்.13/203 மெயின் ரோடு, சிங்கராஜபுரம், மயிலாடும்பாறை வருஷநாடு, தேனி -625579
திரு.தமிழன் த/பெ.அய்யாவு தேவர்
எண்.13/203 பிரதான சாலை, சிங்கராஜபுரம், மயிலாடும்பாறை வருஷநாடு, தேனி-625579

கோரிக்கை அறிவிப்பின்படி செலுத்த வேண்டிய தொகை

ரூ.616259/– (ரூபாய் ஆறு லட்சத்து பதினாறாயிரத்து இருநூற்று ஐம்பத்தொன்பது மட்டும்) 09–04–2025 தேதியன்று கடன் கணக்கு எண். SHLHHENI0000276
கோரிக்கை அறிவிப்பு தேதி–10.04.2025
அடையாளப்பூர்வ சுவாதீன தேதி – 23.06.2025
செயல்படா சொத்து தேதி – 05.04.2025

அடமானச் சொத்தின் விவரம்

பெரியகுளம் பதிவு மாவட்டம், கடமலைக்குண்டு துணை பதிவு அலுவலகம், மயிலாடும்பாறை கிராமம், நத்தம் சர்வே எண்.542/2 1624.75 சதுர அடி நிலம், கட்டிடம் பின்வரும் நான்கு எல்லைகளில்: கிழக்கு: பொதுப் பாதை மற்றும் முத்து மற்றும் ராஜாபாண்டி வீடு, தெற்கு:
பொதுப் பாதை மற்றும் பெரியராசு மற்றும் சின்னராசு வீடு, மேற்கு: பொதுப் பாதை மற்றும் குணசேகரன் வீடு, வடக்கு: கிழக்கு மேற்கு சிமெண்ட் சாலை அனைத்து வசதிகள் மற்றும் பாதை உரிமைகளுடன். தற்போதைய வருவாய் பதிவேட்டின் படி புதிய SF எண்.1915/32 மற்றும் பட்டா 117 ars 0–01–51.

இடம்: தேனி
நாள்: 23–06–2025

ஒம்/– அதிகாரப்பூர்வ அதிகாரி–ட்ரூஹோம் நிதி லிமிடெட்
(முன்பு ஸ்ரீராம் வீட்டு வசதி நிதி லிமிடெட் என அறியப்பட்டது)